முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1121

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.10.2022, திங்கட்கிழமை

1. ஞான ஒளிகொண்ட அரங்கனே
ஞானிகள் வழிகண்ட தேசிகனே
தானதர்மத்தை உலகமெங்கும்
தவபலமாக பெருக்கி ஆளுமைபுரிகின்ற
2. புரிகின்ற ஆறுமுக அரங்கனே
புண்ணியனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அறிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட அரங்கனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் சுபகிருது துலை திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 07 ம் நாள் 24.10.2022 திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு சர்வ சூட்சுமமாய்
தண்டாயுதன் யான் அற்புதம் நிகழ்த்தி வர
மண்ணுலகில் அரங்கன் அவதார சூட்சுமம்
மகத்துவத்தை அறிந்துகொண்ட மக்களெல்லாம்
4. எண்ணம்வழி தெளிவு கண்டு இனிதே
என் வழிபாட்டை நாளும் செய்து வரமாக
ஆகவே அரங்கன் வழி பல்வேறு சூட்சுமங்கள்
அடைந்து தெளிந்து ஞானிகளாக
5. மண்ணுலகில் அரங்கன் ஆசியோடு மாற்றம் பெற நேரும்
மகத்துவம் பட உலகிற்கு ஞான ஆட்சியை
ஆட்சியை அரங்கன் தொண்டர் படை வழி
அகிலத்தார் கண்டு மகிழ நேரும்
6. பெருமைபட அரங்கன் புகழ்பாடிட
பேருலகம் ஞானிகளாகும் வாய்ப்பையும்
ஞானிகள் நிறைந்த நல்லதொரு சூழலையும் பிரபஞ்சமே கண்டு இனிதே
வருமுலகில் முருகப்பெருமான் என் தயவோடு வல்லமை கூடி ஞான ஆட்சிபெற நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–